**சுருக்கம்**

வனம் – தேனி மாவட்டம் – உத்தமபாளையம் வட்டம் – 41–மேலக்கூடலூர் கிராமம் – சுரங்கனார் விஸ்தரிப்பு வன வட்டாரம் – நில அளவை எண்கள் 2194/1B மற்றும் 2194/2B–ல் உள்ள 0.20.0 எக்டர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைத்து அறிவிக்கை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம். 14) துறை**

**அரசாணை (நிலை) எண்.47**

**நாள்: 10.03.2023**
**சுபகிருது: மாசி–26**
**திருவள்ளுவர் ஆண்டு–2054**
**படிக்க.:**

1. அரசாணை (நிலை) எண்.60, சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வனம்.14) துறை, நாள். 09.03.2012.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–15. கடித எண்.டிஎஸ்2/44328/2021, நாள். 29.03.2022.

=======

**ஆணை :**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், 41–மேலக்கூடலூர் கிராமம், சுரங்கனார் விஸ்தரிப்பு வன வட்டாரம், நில அளவை எண்கள் 2194/1B மற்றும் 2194/2Bல் உள்ள 0.20.0 எக்டர் நிலம் தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 16–ன் கீழான அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள் 05.04.2023–ல் ஆங்கிலத்திலும், தேனி மாவட்டம் அரசிதழ் நாள் 19.04.2023–ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

2. 05.04.2023–ந் தேதிய தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் தேனி மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு மதுரை அரசு கிளை அச்சக மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய, கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை தேனி மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சுப்ரியா ஸாஹு**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

<u>பெறுநர்:-</u>
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை - 1.
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
நில நிர்வாகம், சென்னை - 5.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்),
சென்னை - 32.
மாவட்ட ஆட்சியர், தேனி.
வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்,
திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை .
மாவட்ட வன அலுவலர், தேனி.
வன நிர்ணய அலுவலர், போடிநாயக்கனூர்.
<u>நகல்:-</u>
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD-IV) துறை,
சென்னை-9.
சட்டத் (Opinion) துறை, சென்னை-9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (மொழிபெயர்ப்பு) துறை,
சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை-9.
(கோ.எண்.5404/வனம்.14/2022)
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

N.[signature]
**பிரிவு அலுவலர்**
12/03/2022

**அரசு ஆணை (நிலை) எண்.47**
**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.14) துறை, நாள் 10.03.2023–ன்**
**இணைப்பு**

| வ. எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை – 600 009. | 2 | 2 |
| 2 | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை – 600 032. | 3 | 3 |
| 3 | மாவட்ட ஆட்சியர், தேனி | 2 | 2 |
| 4 | வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை | 5 | 5 |
| 5 | மாவட்ட வன அலுவலர்,தேனி | 12 | 12 |
| 6 | வன நிர்ணய அலுவலர், போடிநாயக்கனூர் | 8 | 8 |

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

N. [signature]
பிரிவு அலுவலர்
13/03/2023

**பிற்சேர்க்கை.**

**அறிவிக்கை.**

தமிழ்நாடு 1882–ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்5/1882) பிரிவு 16–ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழே விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாற்புற எல்லைகளுக்குள் அடங்கிய நிலப் பகுதியை 13.09.2023–ஆம் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் காப்பு வனமாக இதனால் அறிவிக்கிறார்.

**விவர அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | தேனி | |
| 2. | வட்டத்தின் பெயர் | : | உத்தமபாளையம் | |
| 3. | எண் மற்றும் கிராமத்தின் பெயர் | : | 41, மேலக்கூடலூர் | |
| 4. | வன வட்டாரத்தின் பெயர் | : | சுரங்கனார் விரிவாக்கப்பகுதி | |
| 5. | நில அளவை எண்கள் | : | **நில அளவை எண்கள்** | **பரப்பளவு (எக்டேரில்)** |
| | | | 2194/1B | 0.09.5 எக்டேர் |
| | | | 2194/2B | 0.10.5 எக்டேர் |
| | | | மொத்தம் | 0.20.0 எக்டேர் |
| 6. | மொத்த பரப்பளவு | | 0.20.0 எக்டேர் | |

**நாற்புற எல்லைகள்**

**வடக்கு.–** எண்.41, மேலக்கூடலூர் கிராமம் நில அளவை எண்கள் 2193, 2194/1A, 2194/1B, 2195 மற்றும் சுரங்கனார் காப்புவனம் எல்லை ஆகியவை சந்திக்கும் இடத்தில் தொடங்கும் இந்த எல்லையானது நில அளவை எண்கள் 2194/1A, 2194/2A ஆகியவற்றின் தெற்கு எல்லைகள் வழியே கிழக்கு நோக்கி சென்று நில அளவை எண். 2194/2B–ன் வடகிழக்கு மூலை மற்றும் எண்.41, மேலக்கூடலூர் கிராமம் நில அளவை எண்கள் 2194/2B, 2194/2A மற்றும் 2195 ஆகியவை சந்திக்கும் இடத்தை சென்றடைகிறது.

**கிழக்கு.–** பின்னர் இவ்வெல்லையானது பொதுவாக எண்.41, மேலக்கூடலூர் கிராமம் நில அளவை எண். 2195–ன் வடக்கு எல்லை வழியாக தெற்கு நோக்கி சென்று எண்.41, மேலக்கூடலூர் கிராமம் நில அளவை எண். 2194/2B–ன் தென்கிழக்கு மூலையைச் சென்றடைகிறது.

**தெற்கு மற்றும் மேற்கு.–** இவ்வெல்லையானது பொதுவாக எண்.41, மேலக்கூடலூர் கிராமம் நில அளவை எண். 2195–ன் வடக்கு எல்லை வழியாக மேற்கு நோக்கி சென்று தொடக்க இடத்தையும் எண்.41, மேலக்கூடலூர் கிராமம் நில அளவை எண்கள் 2193, 2194/1A, 2194/1B, 2195 மற்றும் சுரங்கனார் காப்புவன எல்லை ஆகியவை சந்திக்கும் இடம் மற்றும் இவ்வன வட்டாரத்தின் ஆரம்ப எல்லையை சென்றடைகிறது.

**<u>அனுமதிக்கப்பட்ட உரிமைகள்</u>**

இவ்வன வட்டாரத்தில் உரிமைகள் ஏதும் அனுமதிக்கப்படவில்லை.

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

//உண்மை நகல்//

N. [signature]
பிரிவு அலுவலர்
13/03/2023